செய்தி வெளியீடு எண்:2460 நாள் 08.12.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் 6000 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, 1 போர்வை, 1 தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கட் வீடு தேடிச் சென்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (08.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அடையார் ஆற்றங்கரையோர பகுதிகளான நெருப்புமேடு, ஜோகி தோட்டம், ஜோதியம்மாள் நகர், செட்டித்தோட்டம், விநாயகபுரம், சித்ரா நகர், கோட்டூர்புரம், வாம்பே குடியிருப்பு, அன்னை சத்யா நகர், ரங்கராஜபுரம், சின்னமலை (ஆரோக்யா மாதா குடிசைப்பகுதி) ஆகிய பகுதிகளில் உள்ள 6000 குடும்பங்களுக்கு வீடு வீடாகச் தேடிச் சென்று 5 கிலோ அரிசி, 1 போர்வை, 1 தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கட் ஆகிய பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மகேஷ்குமார், மண்டலக்குழுத்தலைவர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in